भारत का राजपत्र

# The Gazette of India

इந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

नई दिल्ली, शूक्रवार, 29 दिसम्बर, 2000/1922 सका

New Delhi, Friday, 29th December 2000/1922 Saga

புது தில்லி, வெள்ளிக்கிழமை 29, டிசம்பர் 2000/1922 சக

---


**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டமியற்றுத் துறை)*

*புதுதில்லி, 29 டிசம்பர், 2000.*

The translation in Tamil of the Agriculturists' Loans Act, 1884 (12 of 1884), The Maternity Benefit Act, 1961 (53 of 1961), The Cinematograph Act, 1952 (37/1952) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

உழவர் கடன்கள் சட்டம், 1884 (12/1884), பேறுகால நலப்பயன் சட்டம், 1961 (53/1961), திரைப்படச் சட்டம், 1952 (37/1952) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price Rs. 17.00

# உழவர் கடன்கள் சட்டம், 1884

(சட்ட எண் 12/1884)

[1884, ஜூலை 24]

வட இந்தியத் தக்காவிச் சட்டம், 1879ஐ திருத்துவதற்கும் அதனை அளாவச் செய்வதற்கும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

வட இந்தியத் தக்காவிச் சட்டம், 1879ஐ திருத்துவதும், அதனை குறித்தசில பரப்பிடங்களுக்கு அளாவச் செய்வதற்கு வகைசெய்வதும் உகந்ததாக இருப்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

குறுந்தலைப்பு.

1. (1) இந்தச் சட்டம், உழவர் கடன்கள் சட்டம், 1884 என்று வழங்கப்பெறும்; மற்றும்

தொடக்கம்.

(2) இது 1884, ஆகஸ்ட் முதல் நாள் அன்று செல்லாற்றல்பெறும்.

வட்டார அளாவுகை.

2. (1) இந்தப் பிரிவு, 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1-க்கு ஒட்டிமுன்பு, பகுதி ஆ மாநிலங்களில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரைகள் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்.

(2) இந்தச் சட்டத்தின் எஞ்சிய பகுதிகள், முதல் எடுப்பில் உத்தரப்பிரதேசம், மைய மாகாணங்கள், அசாம், தில்லி மற்றும் 1956, நவம்பர் 1க்கு ஒட்டிமுன்பு பம்பாய், பஞ்சாப், ஆஜ்மீர் ஆகிய மாநிலங்களில் அடங்கியிருந்த ஆட்சி நிலவரைகளை மட்டுமே அளாவிநிற்கும்.

(3) ஆனால், மாநில அரசாங்கம் எதுவும், அவ்வப்போது அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் எஞ்சிய பகுதிகளை, தமது நிருவாகத்தின் கீழுள்ள, இந்தச் சட்டம் எந்த ஆட்சிநிலவரைகளின் பகுதி முழுவதிற்கும் அல்லது பகுதி எதற்கும் அளாவி நிற்கிறதோ அந்த ஆட்சி நிலவரைகளுக்கு அளாவிநிற்குமாறு செய்யலாம்.

நீக்கறவு.

3. [சட்டம் X/1879 மற்றும் சட்டம், XV/1880இன் பிரிவுகள் 4 மற்றும் 5இன் நீக்கறவு]. நீக்கறவு செய்தல் சட்டம், 1938இன் இணைப்புப்பட்டியலின் பிரிவு 2இன் வாயிலாக நீக்கறவு செய்யப்பட்டது.

விதிகளை வகுப்பதற்கு மாநில அரசாங்கத் திற்குள்ள அதிகாரம்.

4. *(1)* மாநில அரசாங்கம், அல்லது வருவாய் வாரியமோ அல்லது நிதி ஆணையரோ உள்ள ஒரு மாநிலத்தில், அத்தகைய வாரியம் அல்லது நிதி ஆணையர், மாநில அரசாங்கத்தின் கட்டாளுகைக்கு உட்பட்டு, அவ்வப்போது, பயிரிடத்தக்க நிலத்தின் உரிமையாளர்களுக்கும் கையுடைமையாளர்களுக்கும் இடர்ப்பாட்டு தீருதவிக்காக, விதை அல்லது கால்நடை வாங்குவதற்காக, அல்லது நிலமேம்பாட்டு கடன்கள் சட்டம், 1883இல் குறித்துரைக்கப்படாத ஆனால் வேளாண்மை நோக்கங்களுடன் தொடர்புடைய பிற நோக்கம் எதற்காகவும் வழங்கப்பட வேண்டிய கடன்கள் குறித்து விதிகளை வகுக்கலாம்.

*(2)* அத்தகைய விதிகள் அனைத்தும், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்.

கடன்களை வசூலித்தல்.

5. அத்தகைய விதிகளுக்கு இணங்க வழங்கப்பட்ட கடன் ஒவ்வொன்றும், அதன்பேரில் விதிக்கப்படத்தக்க வட்டி (ஏதேனுமிருப்பின்) அந்த வட்டி அனைத்தும், அதனைக் கொடுப்பதிலோ அல்லது வசூலிப்பதிலோ செய்ய நேரிட்ட செலவுத் தொகைகள் (ஏதேனுமிருப்பின்) அதுவும், அவை கொடுபட வேண்டியதாகிறபோது, அந்தக் கடன் யாருக்கு வழங்கப்பட்டதோ, அந்த நபரிடமிருந்து அல்லது அதனைத் திரும்பச் செலுத்துவதற்கு பிணையதாரராக ஆகியுள்ள நபர் எவரிடமிருந்தும் அவை நிலவருவாய் நிலுவையாக இருந்தாற்போன்று அல்லது கடன் வழங்கப்பட்ட நபர் எவராலும் அல்லது அவரது பிணையதாரரால் கொடுபட வேண்டிய அதனை வசூலிப்பதில் செய்ய நேரிட்ட செலவுத் தொகையாக, இருந்தாற்போன்று வசூலிக்கத்தக்கது ஆகும்.

கூட்டுக் கடன் பெறுநர்களுக் கிடையேயான கடப்பாடு.

6. ஒரு கிராம சமுதாயத்தின் உறுப்பினர்களுக்கு அல்லது பிற நபர்கள் எவருக்கும் வழங்கப்படத்தக்க பணத்தொகை முழுவதையும் பொறுத்தவரை, அவர்கள் அனைவரும் கூட்டாகவும், தனித்தனியாகவும் அரசாங்கத்திற்குச் செலுத்துவதற்கு கட்டுப்பட்டவர்கள் என்ற வரையுரைகளின்பேரில், இந்தச் சட்டத்தின்படி ஒரு கடன் வழங்கப்பட்டிருந்து, அந்தக் கடனை வழங்குகிற ஆணையில் அவர்களுக்கிடையே அந்தப் பணத்தொகைகளில் எந்தப் பகுதியை பங்குத் தொகையாக அவர்கள் ஒவ்வொருவரும், தம் பங்குத்தொகை அளிக்கக் கட்டுப்பட்டவர்கள் என்பதைக் காட்டுகிற, ஒரு விவரவுரை இந்த ஆணையில் பதிவு செய்யப்பட்டு அவர்கள் ஒவ்வொருவராலும் அல்லது அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அவரது முகவரால் மற்றும் அந்த ஆணையைப் பிறப்பிக்கிற அலுவலரால் கையொப்பமிடப்படும் போது, குறியிடப்படும் போது அல்லது முத்திரையிடப்படும்போது அந்த விவரவுரையானது, அந்தப் பணத்தொகையின் எந்தப் பகுதியை தமக்கிடையே அவர்கள் ஒவ்வொருவரும், தம் பங்காக அரசாங்கத்திற்குச் செலுத்தக் கட்டுப்பட்டிருக்கிறார்களோ, அந்தப் பகுதிக்கு அறுதியான சான்று ஆகும்.